# சிங்கப்பூரில் ஆக மலிவான உணவு எங்கே கிடைக்கும்?

***Seithi,*** 13 March 2023

சிங்கப்பூரில் ஆக மலிவான உணவு எங்கே கிடைக்கும்?

ஆக விலை உயர்ந்த உணவு எங்கே உள்ளது?

கொள்கை ஆய்வுக் கழகம் (Institute of Policy Studies) நடத்திய ஆய்வில் அது தெரியவந்திருக்கிறது.

உணவங்காடி நிலையங்களில் பெரும்பாலான கடைகள் விலையை உயர்த்தவில்லை என்று ஆய்வு கூறுகிறது.

அப்படி விலை உயர்த்தி இருந்தாலும், ஒவ்வொரு உணவின் விலையும் அதிகபட்சம் 30 காசு வரை மட்டுமே அதிகரிக்கப்பட்டது.

சென்ற ஆண்டு செப்டம்பர் முதல் நவம்பர் மாதம் வரை 829 உணவு நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

அவற்றில் 50 நிலையங்களில் இந்த ஆண்டின் முதல் 2 மாதங்களின்போது மீண்டும் ஆய்வு நடத்தப்பட்டது.

பொருள், சேவை வரி உயர்வு உணவு விலைகளை எவ்வாறு பாதித்துள்ளது என்பதைக் கண்டறிவதே அதன் நோக்கம்.

பிராட்டா, மீ ரெபுஸ் உட்பட 18 உணவுகளின் விலைகள் ஆராயப்பட்டன.

**மத்திய வட்டாரம்?**

- அனைத்து பானங்களும் chicken chop-உம் ஆக மலிவு.

**சிங்கப்பூரின் வடக்கே?**

- காலை உணவும் (kaya toast, முட்டை, காப்பி, தேநீர்) fishball noodles-உம் ஆக மலிவு.

**சிங்கப்பூரின் மேற்கே?**

- பிராட்டா ஆக மலிவு.

**ஆக அதிக விலை உயர்வு கண்ட பானம்?**

- Iced Milo (12 காசு வரை அதிகரிப்பு)

**காலை உணவு**

- ஆக அதிக சராசரி விலை: மரீன் பரேட்
- ஆகக் குறைந்த சராசரி விலை: குவீன்ஸ்டவுன்

**மாலை உணவு**

- ஆக அதிக சராசரி விலை: செம்பவாங்
- ஆகக் குறைந்த சராசரி விலை: காலாங்

**இரவு உணவு**

- ஆக அதிக சராசரி விலை: ஜூரோங் ஈஸ்ட்
- ஆகக் குறைந்த சராசரி விலை: தோ பாயோ

**3 வேளை உணவு விலைகளைச் சேர்த்தால்...**

- ஆகக் குறைந்த செலவு: தோ பாயோ
- ஆக அதிகச் செலவு: பீஷான்

*ஆதாரம் : Today/fh*